**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**

**அசல் வழக்கு எண். 16 /2009**

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 13.02.2026-ஆம் நாளாகிய இன்று மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 13.02.2026 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | திரு. ரமேஷ் | வயது.. | 49 |
| தந்தை பெயர் | திரு. கலியமூர்த்தி | | |

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை -**

1) நான் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் சிதம்பரம் அண்ணாமலை மருத்துவமனையில் 2001-ல் இருந்து பணிபுரிகிறேன். தற்போது உதவியாளராக பணிபுரிகிறேன். என் தந்தை கலியமூர்த்தி என்ன தொழில் செய்தார் என்றால் சிதம்பரம் பேருந்து நிலையத்தில் காந்தி சிலை அருகே இனிப்பு வியாபாரம் செய்து வந்தார் வழக்கு சொத்தில் குப்புசாமி ஒன்றாம் பிரதிவாதி கூரை வீடு கட்டி குடியிருந்தார் என்றால் சரிதான்.அது சம்பந்தமாக குப்புசாமிக்கும் கலியமூர்த்திக்கும் பிரச்சனை ஏற்படும் என்றால் சரியல்ல .இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு குப்புசாமி கொத்தட்டை கிராமத்தில் அங்காளம்மன் கோவில் தெருவிற்கு குடிவந்து விட்டார் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு குப்புசாமி உடல்நிலை பாதிக்கப்பட்டு இருந்தார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து குப்புசாமிக்கு கிரைய மூலமாக பாத்தியமானதா அல்லது பூர்வீகமான சொத்தா என்றால் பூர்வீகமான சொத்துஎன்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் வழக்கு சொத்து பூர்வீகமான சொத்து என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை அந்த ஆவணம் பொய்யாக தயாரிக்கப்பட்டது ***("தற்போது சாட்சி தனக்கு பார்வை சரியாக தெரியாததால் அந்த ஆவணம் பொய்யாக தயாரிக்கப்பட்டது என்று தவறுதலாக கூறிவிட்டேன் என்று கூறுகிறார்").*** நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்குமூலத்தை நான் படித்துப் பார்த்து தாக்கல் செய்தேனா என்றால் படித்துப் பார்த்து தான் தாக்கல் செய்தேன்.

2) வா.சா.ஆ.1 ஆவணம் புவனகிரியில் வைத்து வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கொத்தட்டை கிராமத்திற்கும், பரங்கிப்பேட்டைக்கும் சுமார் ஆறு கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். கொத்தட்டை கிராமத்திற்கும் புதுச்சத்திரத்திற்கும் சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான்.பரங்கிப்பேட்டை மற்றும் புதுச்சத்திரத்தில் சார் பதிவாளர் அலுவலகம் உள்ளது என்றாலும் அங்கு ஆவணங்கள் விற்கப்படுகிறது என்றாலும், அங்கு ஆவண எழுத்தர் உள்ளனர் என்றாலும் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் சிதம்பரம் காந்தி சிலை அருகே உள்ள ஸ்வீட் கடையில் வைத்து எழுதப்பட்டது. வா.சா.ஆ.1 ஆவணம் தயாரிப்பதற்கு எந்தவிதமான மூலஆவணங்களை 1-ஆம் பிரதிவாதி கொண்டு வந்தார் என்றால் சொத்து விவரங்களை தாளில் எழுதி எடுத்து வந்தார். மேற்படி எழுதி எடுத்துவந்த தாளை தவிர வேற எந்த ஆவணங்களும் கொண்டுவரவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள விவரங்கள் யார் சொல்லி எழுதப்பட்டது என்றால் குப்புசாமி சொல்ல சொல்ல சின்னப்பா என்பவர் நகல் எழுதினார். நகல் எழுதப்பட்டபிறகு படித்துக்காண்பிக்கப்பட்டது குப்புசாமி சரியாக இருப்பதாக சொன்னார். நகல் சரியாக இருந்ததால் சிதம்பரம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு எதிரே இருந்த கடையில் வைத்து சீனிவாசன் என்பவர் டைப் செய்தார். டைப்

செய்தது தொடர்பாக சீனிவாசன் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கையொப்பம் ஏதேனும் செய்தாரா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தை தயாரித்ததாக சின்னப்பா கையொப்பம் போட்டுள்ளாரா என்றால் இல்லை, சாட்சியாக கையொப்பம் போட்டுள்ளார். வா.சா.ஆ.1 ஆவணத்தை டைப் செய்த நபரின் விவரமோ, ஆவணத்தை தயாரித்த விவரமோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கொத்தட்டை கிராமத்தில் என் தந்தையின் நண்பர்களும், என் நண்பர்களும் உறவினர்களும் உள்ளனரா என்றால் உள்ளனர். கொத்தட்டை கிராமத்திலிருந்து மீதிக்குடி கிராமத்திற்கு சுமார் 30 கி/மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். சின்னப்பா என்பவர் என் பெரியப்பா குப்புசாமிக்கு (1-ஆம் பிரதிவாதி)உறவினர். நான் நாடார் சமூகத்தை சார்ந்தவர். 1-ஆம் பிரதிவாதி குப்புசாமி வன்னியர் சமூகத்தை சேர்ந்தவர் என்றால் சரியல்ல, அவரும் நானும் ஒரே சமூகம்தான்.

3) வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2-ஆவது சாட்சி கையொப்பத்தை மகேந்திரமூர்த்தி என்பவர் போட்டுள்ளார் என்றால் சரிதான். மகேந்திரமூர்த்தி எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் மீதிக்குடியைச் சேர்ந்தவர். வா.சா.ஆ.1 ஆவணம் எழுதும்போது குப்புசாமி அடையாள ஆவணம் ஏதேனும் கொண்டுவந்தாரா என்றால் இல்லை. குப்புசாமி தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிந்தார். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் அடையாள அட்டையானது குப்புசாமி தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிந்ததற்கான அடையாள அட்டை என்றால் சரிதான், **அந்த அடையாள அட்டையின் அசல் பி.சா.ஆ.1-**ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அடையாள அட்டையில் குப்புசாமி கையொப்பம் செய்துள்ளார் என்றால் அது அவருடைய கையொப்பமா என்று எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் முதல் பக்கத்தில் இருக்கும் கையொப்பத்திற்கும் பி.சா.ஆ.1 ஆவணத்தில் இருக்கும் கையொப்பத்திற்கும் வித்தியாசம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.1 ஆவணங்களின் உள்ள கையொப்பத்திற்கு வித்தியாசம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல, இரண்டும் ஒன்றாகத்தான் உள்ளது.

4) எனது தந்தை கலியமூர்த்தி (இறந்த 1-ஆம் வாதி ) குப்புசாமிக்கு வழக்கு சொத்தினை கிரயம் பெறுவதற்கு தயாராக இருப்பதாக சொல்லி அறிவிப்பு ஏதேனும் கொடுத்தாரா என்றால் இல்லை. எனது தந்தை கலியமூர்த்தி குப்புசாமியின்மீது இந்நீதிமன்றத்தில் O.S 32/2008 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். O.S 32/2008 என்ற வழக்கு குப்புசாமி யாருக்கும் வழக்கு சொத்தினை கிரயம் செய்யக்கூடாது என்று நிலைகால உறுத்துக்கட்டளை வேண்டிதான் தாக்கல் செய்திருந்தார் என்றாலும் சொத்தினை கிரயம் எழுதி கொடுக்க சொல்லி தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் 2-ஆவது பக்கத்தில் 1ஆவது பத்தியின் இறுதியில் எனது தந்தை தன்னுடைய ஒப்பந்த கடமையை நிறைவேற்றுவதற்கும், மீதி விற்பனை மறுபயன் கொடுப்பதற்கும் தயாராக விருப்பமாக உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். O.S 32/2008 என்ற வழக்கு நீதிமன்றத்தில் எவ்வாறு தீர்ப்பானது என்றால் எங்களுக்கு சாதகமாக தீர்ப்பானது. மேற்படி வழக்கின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி வழக்கு தீர்ப்பானபிறகு எனது தந்தையார் குப்புசாமிக்கு தீர்ப்பு விவரம் குறித்து அறிவிப்பு ஏதேனும் கொடுத்தாரா என்றால் அதுப்பற்றி தெரியவில்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தின் 4-ஆவது பக்கத்தில் 3 பத்தியின் கடைசி வரியில் O.S.32/2008 என்ற வழக்கு திரும்ப பெறப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி O.S.32/2008 வழக்கினை திரும்ப பெற்றபிறகு எனது தந்தை தற்போதைய வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தற்போதைய வழக்கு தாக்கல் செய்வதற்குமுன்பு எனது தந்தை வழக்கு சொத்து சம்மந்தமான வில்லங்க பதிவினை எடுத்துப்பார்த்தாரா என்றால் இல்லை.

5) 3-ஆம் மற்றும் 4-ஆம் பிரதிவாதிகள் இவ்வழக்கு சொத்தினை கிரயம் வாங்கியுள்ளார்கள் என்றால் Forgery ஆக ஆவணத்தை தயாரித்துள்ளார்கள். 3-ஆம் மற்றும் 4-ஆம் பிரதிவாதிகளின் கிரய ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. 3-ஆம் மற்றும் 4-ஆம் பிரதிவாதிகளின் சம்மந்தப்பட்ட கிரய ஆவணம் இந்த வழக்கிற்கு முன்பு அல்லது பின்பு ஏற்படுத்தப்பட்டதா என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகுதான். நீதிமன்றத்தில் என்னிடம்

காட்டப்படும் ஆவணமானது 02-07-2008-ஆம் தேதியன்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். **மேற்படி ஆவணத்தின் தேதி, மாதம், வருடம் குறிப்பிடப்பட்டுள்ள முதல் பக்கத்தின் முதல் வரியானது பி.சா.ஆ.2-ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஆவணமானது 02-07-2008-ஆம் தேதியன்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். **மேற்படி ஆவணத்தின் தேதி, மாதம், வருடம் குறிப்பிடப்பட்டுள்ள முதல் பக்கத்தின் முதல் வரியானது பி.சா.ஆ.3-ஆக குறியீடு செய்யப்படுகிறது.** O.S.32/2008 என்ற வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்குமுன்பே 7-ஆம் மற்றும் 8-ஆம் பிரதிவாதிகள் 3-ஆம் மற்றும் 4-ஆம் பிரதிவாதிகளுக்கு 02–07-2008 அன்று கிரய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல, அந்த ஆவணங்கள் Forgery ஆக தயாரிக்கப்பட்டுள்ளது.

6) மேற்படி கிரய ஆவணங்கள் O.S.32/2008 வழக்கிற்குமுன்பு எழுதப்பட்டதன் காரணமாகத்தான் அந்த வழக்கை சரியான பரிகாரம்கோரி தாக்கல் செய்யாமல் வழக்கை திரும்ப பெற்றுவிட்டோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்பதால் சட்டப்படியாக கொடுக்கவேண்டிய அறிவிப்பினை கொடுக்காமல் O.S.32/2008 வழக்கும் மற்றும் இந்த வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்பதால்தான் அந்த ஆவணத்தை பரங்கிப்பேட்டை அல்லது புதுச்சத்திரத்தில் எழுதாமல் சிதம்பரத்தில் வைத்து எழுதப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்குரை மனுவில் வழக்குமூலப் குதியில் 03-12-2007 அன்று வாதிக்கும் 1-ஆம் பிரதிவாதிக்கும் இடையே வழக்குசொத்தினை கிரயம் பெறுவதற்கு வாய்மொழி உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் சரியாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் சரியாகத்தான் சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்பதால் சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள் என்ற அடிப்படையில் எனக்கும் மற்ற வாதிகளுக்கும் அந்த ஆவணத்தின் வழியாக எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

(S/D.Thiru.D. Yuvaraj)
District Munsif cum Judicial Magistrate,
Portonovo.